**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1. அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர்ந்தபட்ச தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.1.1 அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம்

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 16(3) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூபா 5,000 மில்லியனாக இருந்ததுடன் அது பகுதி அடிப்படையில் அரசாங்க திரண்ட நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முடிவடைந்திருந்த நிலையிலும் அம் மூலதனம் திரட்டப்பட்டிருக்கவில்லை.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 நிறுவனம் தொடர்ந்திருத்தல் எண்ணக்கரு

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 16(உ) ஆம் உபபிரிவின் பிரகாரம் குறைந்த செலவிலான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிதி வழங்குவதற்காக சொத்துக்களை அபிவிருத்தி செய்பவர்களிடமிருந்து சேவைக்கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகையும் அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் 2010 மார்ச் இற்குப் பின்பு அதிகாரசபைக்கு அந்நிதி கிடைத்திருக்கவில்லை. மேலும் 2010 திசெம்பர் 14 ஆந் திகதிய 10/2951/504/012 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இச்சேவைக் கட்டணம் அறவிடுவது நிறுத்தப்படடிருந்த காரணத்தினால் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான வருமான மூலம் தடைப்பட்டிருந்ததுடன் இக்காரணத்தினால் அதிகாரசபையின் தொடர்ந்திருத்தல் தன்மை திறைசேரியின் நிதி உதவியில் தங்கியிருந்தது.

### 1.2.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03

புின்வரும் பிரகாரம் நியமங்களுக்கு முரணாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

I. கிடைக்க வேண்டிய சேவைக் கட்டணமான வருமானமானது செலுத்த வேண்டிய கட்டிட வாடகையிற்கு எதிராக ஈடு செய்யப்பட்டிருந்தது.

II. நிதிக்கூற்றுக்களில் பகுதியாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய உரிமை மூலதனத்தின் கூற்று சமர்ப்பிக்கப்படாமை.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 09

நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 16

பணிக்கொடை நிதி திரட்டப்பட்டு அந்நிதி முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 187 பெயருடைய வட்டார வீடமைப்புத்திட்டத்தின் நிர்மாணங்கள் தாமதமாகிய காரணத்தினால் உரிய வீட்டுரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டிய மேலதிக தொகையான ரூபா 1,564,000 இற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டமையினால் செலுத்த வேண்டியிருந்த தொகை ரூபா 200,785 ஆக இருந்த போதிலும் அது ரூபா 257,100 ஆக ரூபா 56,315 தொகையினால் அதிகரித்து கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது. இதனால் வருடத்தின் பெறுமானத் தேய்வும் ரூபா 11,263 இனால் அதிகரித்து கணக்குகளில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2007 பெப்ரவரி 22 ஆந் திகதிய சீஎம்/07/0140/226/013 ஆம் இலக்க அமைசரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட்டவுடன் ரீல் நிறுவனம் உடனடியாகக் கலைக்கப்பட்டு அதன் பதவியினர் மற்றும் சொத்துக்கள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட வேண்டிய போதிலும் அது சம்பந்தமாக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிறுவனத்தைக் கலைத்து

அதன் பதவியினர் மற்றும் சொத்துக்களை அதிகாரசபைக்கு கையளிப்பதிலுள்ள தாமதத்திற்கு நாளாந்த நடவடிக்கைகளிலுள்ள தாமதம் மற்றும் கம்பனியிடம் காணப்பட்ட பாரியளவிலான பொறுப்புக்கள் போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்ததாக தலைவரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2002 மே 24 இன் PF/PE 21 ஆம் இலக்க் அரச நிதிச் சுற்றுநிருபம் | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் மீளாய்வாண்டின் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | நிதிப்பிரமானம்(நி.பி) | |
| | நி.பி 133 | அதிகாரசபையினால் உள்ளகக் கணக்காய்வுப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------------------

### 2.1 நிதி மீளாய்வு

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையின் செயற்பாட்டு விளைவு ரூபா 21,083,578 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை தவறாக வருமானத்திற்கு எதிராக சீராக்கப்பட்டமையினால் ரூபா 26,276,233 மிகையாக இருந்தது. முன்னைய ஆண்டின் ரூபா 5,192,655 தொகையான பற்றாக்குறையுடன் ஒப்பிடுகின்ற போது ரூபா 31,468,888 ஆன அதிகரிப்பைக்காட்டியது. எவ்வாறாயினும் ஆண்டின் இறுதியின் போதும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்படாமையினால் இவ்வாறான நிலைமை உருவாகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

#### 2.2.1 செயலாற்றல்

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 ஆம் ஆண்டிற்கான அதிகாரசபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட கீழே காட்டப்படுகின்ற செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த 1 % சேவைக் கட்டணம் கிடைக்காமையினால் இந்நிலைமை ஏற்பட்டிருந்ததாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

| செயற்திட்டங்கள் | 2010 ஆம் ஆண்டில் செயற்படுத்தவதற்கு உத்தேசிக்கப்பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| தற்காலிக வீடுகள் | 2,750 | 340.0 |
| தற்காலிக வீடுகள்(மாற்றக்கூடிய) | 1,549 | 111.1 |
| ஓலைக்குடிசைகளற்ற நகர நிகழ்ச்சித்திட்டம்-புதிய | 200 | 20.3 |
| தொடர் வீடுகள் (மாற்றக்கூடிய) | 133 | 9.0 |
| 187 தோட்ட தொடர்மாடி வீடுகள் | 56 | 167.1 |
| கொழும்பு நகரத்தில் 40,000 தொடர்மாடி வீடுகள் | 40,000 | 1200.0 |
| மொத்தம் | | 1847.5 |

(ஆ) இதன்பிரகாரம் அதிகாரசபையினால் நிதிஏற்பாடு பெறுவதிலுள்ள இயலுமை சம்பந்தமாக சாத்தியத்தை கவனத்திற்கொள்ளாமல் தான்தோன்றித்தனமாக செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மேலும் நிதிக்கூற்றுக்களில் அபிவிருத்தி செலவாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 85,219,680 தொகையானது எதுவித புதிய செயற்திட்டங்களுக்குரியதாக இல்லாதிருந்ததுடன் முன்னைய ஆண்டின் எஞ்சிய பகுதி வேலைகளுக்காக செய்யப்பட்ட செலவினமாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபைக்காக 2010 ஆம் ஆண்டினை மேவும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டம்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 7.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 187 தோட்ட மீள்புனரமைப்பு செயற்திட்டம்

---

(I) நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 52 பேர்ச்சஸ் காணியினைக் கையளிப்பது சம்பந்தமாக எவ்வித எழுத்துமூல ஒப்பந்தமுமின்றி அக்காணியினை உத்தேச வீடமைப்புத்திட்ட நிர்மாணிப்புக்காக திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட 46 குடும்பங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அதன் பிரகாரம் ரூபா 46 இலட்சம் தொகையில் 46 குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(II) 2009 திசெம்பர் 02 ஆந் திகதி நகர குடியிருப்பு அதிகாரசபை மற்றும் உரிய வீட்டுரிமையாளர்களுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 7 (iii) ஆம் பிரிவின் பிரகாரம் மேலே கூறப்பட்ட திட்டத்தை முடிவுறுத்துவதற்கான காலம் ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களை விஞ்சுமாயின் விஞ்சுகின்ற மூன்று மாதம் அல்லது அதற்குக்குறைவான காலத்திற்காக இரண்டாம் தரப்பினருக்கு இவ் ஒப்பந்தத்தின் ஆரம்ப திகதியிலிருந்து 10 மாதத்திற்குள் ரூபா 33,500 தொகையினை முழுமையாக ஒரே தடவையில் செலுத்தி முதலாம் தரப்பினருக்கு அதிகாரசபையினால் வழங்கப்பட வேண்டும் இது வரையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடத்தினைக் கடந்திருந்த போதிலும் எவ்வித அபிவிருத்தி செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படாத நிலைமையில் ஒப்பந்தப்பிரகாரம் இரண்டாம் தரப்பினரால் வீட்டுவாடகை கேட்பதற்கு

அல்லது அதிகாரசபைக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க்கூடிய நிலைமை உருவாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.2.5 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

---

முறையான திட்டமிடலின்றி அதிகாரசபையினால் 187 பெயருடைய தோட்ட வீடமைப்புத் திட்டமொன்று ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணிப்புக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் எதனையும் எடுப்பதற்கு சபையினால் இயலாதிருந்தது. அவ்வாறே அதிகாரசபையினால் இரண்டாம் தரப்பினருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தமையினால் எதிர்காலத்தில் நிதிசார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவதானிக்கப்பட்டது. அரச சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் போது அதிகாரசபையினால் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**2.2.6 மனிதவள முகாமைத்துவம்**

---

அதிகாரசபை உருவாக்கப்பட்டு 02 வருட காலம் கடந்திருந்தும் அதிகாரசபையின் தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகம் பதவிகள் தவிர மற்றைய பதவியினர் 73 பேரும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஏற்கனவே ஆளணிக் கோப்பிற்கான அங்கீகாரம் பெறப்பட்டு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்படுவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**2.2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபையினால் ஆண்டின்போது வாடகை அடிப்படையில் மோட்டார் வாகனங்களை பெறப்பட்டமைக்காக ரூபா 2,457,511 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 2002 ஒக்தோபர் 11 ஆந் திகதிய கொள்கைத்திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சினால் விடுக்கப்பட்டிருந்த எம்பீடீஐ/எம்பீஆர்டீ/வீஈஎச் ஆம் இலக்க சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரீல் நிறுவனத்திற்குச் சொந்தமான வீடமைப்புத்திட்டங்களை புணர்நிர்மானம் செய்வதற்காக மற்றும் ரீல் நிறுவனத்தின் ஊழியர்களுக்காக சம்பளம் செலுத்துவதற்காக அதிகாரசபையினால் செலவு செய்யப்பட்ட ரூபா 7,597,196 தொகையானது நடைமுறைச் சொத்தாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நடவடிக்கைக்காக வீடமைப்பு நிர்மாண பொறியியல் சேவை மற்றும் பொது வசதிகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நிதிஏற்பாடுகளில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்துக்குக் காலம் அதிகாரசபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) மூலதன ஈடுபடுத்தல்

(ஆ) கணக்கீடு

(இ) முகாமைத்துவ அபிவிருத்திச் செலவினம்

(ஈ) மனிதவள முகாமைத்துவம்